பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 10 புதன்கிழமை 24.03.2022 கதிர் 07

## வரி அதிகரிப்புக்கான சட்டம் நிறைவேறியது

நிதிச் சேவையை வழங்குவதற்கான சேர் பெறுமதி வரியை அதிகரிப்பதற்கான உரிய சட்டமூலம் திருத்தங்களுடன் இன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கமைய 2022 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிதிச் சேவை வழங்கலுக்கு சேர் பெறுமதி வரி 15% இலிருந்து 18% ஆக அதிகரிக்கப்படும்.

# ராஜபக்ஷ சகோதரர்களின் பாவக் கர்மாவினாலேயே நாட்டுக்கு இந்த நிலைமை

### நாடாளுமன்றில் சிறிதரன் விசனம்

**கொழும்பு, மார்ச் 24**

**முள்ளிவாய்க்காலில் உணவுக்காக வரிசையில் நின்ற குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மீது குண்டுகளை வீசிக்கொன்ற, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் பாவக் கர்மாவே, சிங்களவர்களையும் அத்தியாவசியப் பொருள்களுக்காக வரிசையில் நிற்க வைத்து, நாட்டை இந்த இழிநிலைக்குத் தள்ளியுள்ளது என கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.**

2



## 30 வருடங்களில் பிரபா செய்ய முடியாததை 2 வருடங்களில் கோட்டா செய்து முடித்தார்

### நாட்டை அழித்து சாதனை என்கிறார் இராதா எம்.பி.



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் 30 வருடங்களில் செய்ய முடியாததை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரண்டே வருடங்களில் செய்துவிட்டார் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

காணி உரிமை என்பது மலையக மக்களுக்கு எட்டாக்கனி எனவும் அவர் குறிபிட்டார்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு

2

## ரயில் கட்டணம் அதிகரிப்பு

மலையகம் மற்றும் வடமாகாண வழித்தடங்களின் இன்டர் சிட்டி மற்றும் சிறப்பு ரயில் சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த விலை உயர்வு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளது என இலங்கை ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதன்படி, கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி வரையிலான புதிய கட்டணங்களின் விவரம் பின்வருமாறு:-

* முதல் வகுப்பு - ரூ.1000
* 2 ஆம் வகுப்பு - ரூ.500
* 3 ஆம் வகுப்பு - ரூ.300

வடக்கு ரயில் கட்டணங்கள் வருமாறு:-

2

## கிளிநொச்சியில் விபத்து



கிளிநொச்சி நகரின் ஏ 9 வீதியில் கந்தசுவாமி ஆலயம் முன்பாக இன்று காலை 9 மணியளவில் விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

சொகுசு கார் ஒன்று வீதியின் மறுபக்கத்திற்கு கடக்க முற்பட்ட போது யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று கார் மீது மோதியுள்ளது. விபத்தில் கார் பலத்த சேதமடைந்துள்ளது.

## வீட்டைப் பூட்டி நெருப்பு வைத்த காதலன் யுவதி, தந்தையுடன் தானும் எரிந்து மரணம்

### கட்டுகஸ்தோட்டை, மெனிக்கும்புரவத்தையில் கொடூரம்





கட்டுகஸ்தோட்டை - மெனிக்கும்புரவத்தை பகுதியில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்தத் தீ விபத்தில் தந்தை, மகள்

2



## தமிழக மீனவர்கள் 16 பேர் இன்று அதிகாலை கைது!

### 7 ஆம் திகதி வரை விளக்கமறியல்

இலங்கை கடற் பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடித்த இந்திய மீனவர்கள் 16 பேர் இன்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2

## மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தியில் மீட்புப் பணிக்கு 2 ஹெலிகொப்டர்கள்

### உச்சிப்புளி ஐ.என்.எஸ். பருந்து தளத்தில் இணைப்பு





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 24

மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி பிராந்தியத்தில் கடல்சார் கண்காணிப்பை மேம்படுத்தவும், கடல்சார் தேடல் மற்றும் மீட்பு பணிகளுக்கு இரவும், பகலும் உதவக் கூடிய இரு ஹெலிகொப்டர்கள்

2

## கிளிநொச்சியில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனினும், காரில் பயணித்த சிரேஷ்ட சட்டத்தரணி சிவபாலசுப்ரமணியம் தெய்வாதீனமாக எவ்வித பாதிப்புமின்றி உயிர் தப்பியுள்ளார்.

விபத்தை அடுத்து ஏ 9 வீதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தக் கூடியிருந்த இளைஞர்கள் பொலிஸாருக்கு உதவினர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## வீட்டைப் பூட்டி நெருப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் மகளின் காதலன் ஆகியோர் தீயில் சிக்கி உயிரிழந்துள்ள நிலையில், தாய் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்த யுவதிக்கும் இளைஞருக்குமிடையிலான காதல் தொடர்பே இந்த தீப் பரவலுக்கான காரணம் என்றும், இச்சம்பவத்தில் உயிரிழந்த இளைஞனே தீயை வைத்தார் என ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

இன்று அதிகாலை அந்த வீட்டுக்கு வருகை தந்த இளைஞன், வீட்டுக்குள் எவரும் செல்ல முடியாத வகையில் கதவுகளைப் பூட்டி, தீயை வைத்துள்ளமை தெரியவந்துள்ளது.

அத்துடன்அந்த இளைஞன் ஏதோ ஒருவகையான திரவத்தை வீட்டுக்குள் வீசியுள்ளான் என வைத்தியசாலையில் தீக்காயங்களுடன்அனுமதிக்கப்பட்டுள்ள யுவதியின் தாய் வாக்குமூலமளித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இச்சம்பவத்தில் குறித்த இளைஞன், யுவதி மற்றும் யுவதியின் தந்தை ஆகியோர் உயிரிழந்துள்ளமைடன், தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தமிழக மீனவர்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதில் ஒரு படகில் மீன்பிடியில் ஈடுபட்ட 12 பேர் கிளிநொச்சி இரணைதீவுப் பகுதியில் கைது செய்யப்பட்டனர். அதே நேரம் மேலும் ஒரு படகில் நெடுந்தீவுப் பகுதியில் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 12 பேர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதே நேரம் நெடுந்தீவு கடல் பகுதிக்குள் ஊடுருவிய மீனவர்கள் நால்வரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சமயம் அவர்களையும் 7 ஆம் திகதிவரையில் விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

## மன்னார் வளைகுடா, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி அருகே உள்ள ஐ.என்.எஸ். பருந்து தளத்திலேயே இந்த மேம் பட்ட இலகுரக எம்.கே 3 வகை ஹெலிகள் இணைக்கப்பட்டன.

ரஷ்ய தொழில்நுட்பத்தில் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட இந்த இரண்டு இலகுரக ஹெலிகள் இராமநாதபுரம் உச்சிபுளியில் அமைந்துள்ள ஐ.என்.எஸ். பருந்து இந்தியக் கடற்படை விமான நிலையத்தில் முறைப்படி சேர்க்கப்பட்டது.

இந்த விழாவில் இந்தியாவின் கிழக்கு பிராந்திய கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிஸ்வஜித்தாஸ்குப்தாவினால், ஐ.என்.எஸ். பருந்துவின் கடற்படை வீரர்கள் முன்னிலையில் தண்ணீர் தாரைப் பிரயோகத்துடன் ஹெலிகள் வரவேற்கப்பட்டன.

இந்த ஹெலிகளில் அதிநவீன கடல்சார் ரோந்து ராடார் மற்றும் எலக்ட்ரோ ஒப்டிகல் பேலோட் உள்ளதால் இது கண்காணிப்பு திறனை மேம்படுத்துகிறது. இந்தத் திறன்கள் இந்தியக் கடற்படைக்கு அதன் செயல்பாட்டுத் திறனை மேலும் விரிவுபடுத்தவும், இந்தப் பிராந்தியத்தில் உள்ள நீர்நிலைகளில்கண்காணிப்பில் ஈடுபடவும் பெரிதும் உதவும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## 30 வருடங்களில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விதிகள் மீதான நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர் -

சிங்களவர்கள், வட,கிழக்கு தமிழர்கள், முஸ்லிம் உள்ளிட்ட மக்களுக்கு இந்நாட்டில் காணிகள் உள்ளன. ஆனால் மலையக மக்களுக்கு காணிகள் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது.

தொழிலாளர்கள், தொழிலில் இருந்து ஓய்வுபெற்றதன்பின்னர்வாழ்வதற்கென ஒரு வீடு அவர்களுக்கு இல்லை. அவர்கள் வீதிகளில் நிற்கும் நிலையே காணப்படுகிறது. வாக்குரிமை இல்லாத காலத்திலும் வாக்குரிமை பெற்ற பின்னரும் மலையக மக்களுக்கு காணி உரிமைகள் கிடைக்கவில்லை.

மாகாணசபைகளை முதலில் அமைத்து அதன் ஊடாகக் காணிப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

முப்பது வருடங்கள் யுத்தம் செய்தும் நாட்டை பிரபாகரனால் அழிக்க முடியவில்லை. ஆனால் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற இரண்டே வருடங்களில் நாட்டை அவர் அழித்து விட்டார் என்பதுபோல ஒரு கேலிசித்திரத்தை நான் பார்க்கிறேன். - எனவும் அவர் தெரிவித்தார்.

## ரயில் கட்டணம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
* கொழும்பு கோட்டையிலிருந்து குருநாகல் வரையிலான முதல் வகுப்பு கட்டணம் - 600 ரூபாவிலிருந்து 1000 ரூபவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

* கொழும்பு கோட்டையில் இருந்து அனுராதபுரத்திற்கான முதல் வகுப்பு கட்டணம் - 1,200 ரூபாவில் இருந்து 1,500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

* கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான முதல் வகுப்புக் கட்டணம் - 1,400 ரூபாவிலிருந்து 1,700 ரூபாவாக அதிகரித்துள்ளது.

## ராஜபக்ஷ .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மீதான நேற்றைய விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர் –

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்குக்கூட நாட்டு மக்கள் வரிசைகளில் நிற்கிறார்கள். இந்த பொருளாதார நெருக்கடியை தமிழ் மக்கள் 20 வருடங்களுக்கு முன்பே அனுபவித்து இருக்கிறார்கள்.

நாட்டில் நிலவும் கடதாசி தட்டுப்பாட்டால் பரீட்சைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு, பல பத்திரிகை நிறுவனங்களும் தங்களது பக்கங்களை குறைத்துள்ளன.

20 வருடங்களுக்கு முன்னர் இந்திய அமைதிப் படையினர் தமிழர் பகுதிகளுக்கு நுழைந்தபோதும் தமிழர்கள் இந்நிலைமைக்கு முகங்கொடுத்தனர்.

வரிசைகளில் நின்றவாறே மடிந்து விழுகிறார்கள். தமிழ் மக்களுக்கு இந்த வரிசைகள் புதிதல்ல. ஆனால் இப்போதே சிங்கள மக்கள் இதனை அனுபவிக்கிறார்கள். புலிகளின் தலைவர் பிரபாகரனின் காலத்தில் எவரும் பட்டினியால் உயிரிழக்கவில்லை. வரிசைகளில் நிற்கவில்லை. சிங்கள தலைவர்கள் எவரும் நேர்மையுடன் சிந்திக்க தயாராக இல்லை என்பதை சிங்கள மக்களுக்குக் கூற விரும்புகிறேன்.

அத்தியாவசிய பொருள்களுக்காக வரிசையில் நின்ற நால்வர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர். இது நாட்டுக்கு வெட்கமில்லையா? கேவலமில்லையா?

பிரபாகரனிடம் நாட்டை கொடுத்திருக்கலாமென சிங்களவர்களே இன்று கூறுகின்றார்கள். சிங்கள மக்களின் நிலைமைக்கு நாம் அனுதாபங்களை தெரிவிக்கிறோம் – எனவும் தெரிவித்தார்.

தமிழ், சிங்களம் என்கிற இரு தேசிய இனங்களையும் அரவணைத்து செல்லக்கூடிய தலைவன் வராதவரையில் இந்நாடு இதைவிட மோசமான நிலைமைகளையே சந்திக்கும்.

அதிகாரங்களை பகிர்ந்து, சமஷ்டி அடிப்படையில் தீர்வை வழங்க கூடிய ஒரு சிங்களத் தலைமகன் எப்போது வருகின்றானோ அன்றுதான் நாடு மீளும். அந்தச் சிங்கள மகன் மகா மனிதனாக மாறுவான். அவ்வாறான ஒரு சிங்கள மகனை உருவாக்க சிங்கள மக்கள் முன்வரவேண்டும். – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## கோட்டாவுக்கு வரலாற்றில் இடம்

**உலகில் காந்தி நாமம் இருக்கும் வரை அவரைச் சுட்ட நாதுராம் கோட்ஸேயின் பெயரும் இருக்கும். அன்னை தெரேசாவின் பெயர் வரலாற்றில் நிலைப்பது போல உலகப் பேரழிவுக்குக் காரணமான சர்வாதிகாரி ஹிட்லரின் பெயர் கூட வரலாற்றில் நிலைத்தே இருக்கும்.**

**வரலாற்றில் நிலைப்பது அல்ல முக்கியம். எதற்காக நிலைப்பது என்பதுதான் முக்கியம்.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரும் வரலாற்றில் இடம்பெறும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ தெரிவித்திருக்கும் கூற்றை இந்தப் பின்புலத்தில்தான் நாம் நோக்க வேண்டி இருக்கின்றது.**

**அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ கூட இந்தப் பாராட்டை உயர்வு நவிழ்ச்சியாக கூறுகின்றாரோ என்றும் கூட சந்தேகம் வருகின்றது.**

**இலங்கை வரலாற்றில் மிக மோசமான நாட்டுத் தலைவர் என்று இலங்கை மக்கள் எல்லோரும் இப்போது திட்டித் தீர்க்கும் சமயத்தில் இப்படி ஒரு புகழாரத்தை ஜனாதிபதி கோட்டாபயவுக்கு அமைச்சர் சூட்டும்போது அவ்வாறான ஒரு சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாதது தான்.**

**நாட்டில் கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்திய அரும் பெரும் சேவையை ஒட்டித்தான் ஜனாதிபதிக்கு இந்தப் புகழாரம் என்கிறார் அமைச்சர்.**

**கொவிட் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்போரின் எண்ணிக்கையைக் குறைக்கும் விதத்தில் அரிய பணியை ஆற்றி இருக்கின்றாராம் ஜனாதிபதி. அதற்குத் தான் இந்தப் பாராட்டு.**

**பேரிடராகப் பீடித்த கொவிட்டைக் கட்டுப்படுத்தியது இலங்கை மட்டுமல்ல. உலக நாடுகள் எல்லாம் தான். கொவிட் கட்டுப்பாட்டுக்கான தடுப்பூசியை விரைந்து நேரத்துடன் பெற்றிருந்தால் பல்லாயிரம் உயிரிழப்புக்களையும் பிற பாதிப்புகளையும் இலங்கை தவிர்த்து இருக்க முடியும். ஆனால் சர்வதேசத்திடமிருந்து விரைந்து நேரத்துடன் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சர்வதேசி ராஜதந்திர ஊடாட்டத் தகைமையை கோட்டா அரசு பேணாத காரணத்தினால் நேரத்துடன் இந்த தடுப்பூசிகளை விரைந்து பெற்றுக் கொள்ள இயலாமல் போயிற்று. அது தாமதமானது. இந்த காலதாமதம் பல பாதிப்புகளை – உயிரிழப்புகளை – பின்னடைவுகளை –நாட்டுக்கு ஏற்படுத்தியது என்பது மறந்துவிடக் கூடியதன்று. எனவே கொவிட் தணிப்பு நடவடிக்கைகளுக்காக வரலாற்றில் பதியப்படும் தலைவராக கோட்டாபய மிளிர்வதற்கு ஏதும் இடமில்லை என்பதுதான் உண்மை.**

**ஆனாலும் கோட்ஸேவைப் போல, ஹிட்லரைப் போல, கோட்டாபயவுக்கும் வரலாற்றில் நிச்சயம் இடம் உண்டு என்பது உறுதி.**

**முன்னரும் கூட அதைச் சுட்டிக்காட்டி இருக்கின்றோம். மிகக் குறுகிய காலத்தில் நாட்டில் அதீத மக்கள் செல்வாக்கு பெற்று, முழு அதிகாரங்களுடன் ஆட்சியைக் கைப்பற்றி, மிகக் குறுகிய காலத்துக்குள்ளேயே மக்களின் செல்வாக்கை இழந்த அரசியல் தலைவர் என்ற பெயரை வரலாறு நிச்சயம் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கும் என்பது திண்ணம்.**

**அவருக்கு வாக்களித்த 69 லட்சம் வாக்காளர்களில் கணிசமானோர் இப்போது மண்வாரிக் கொட்டி, அவரைத் திட்டித் தீர்க்கும் நிலைமையே உள்ளது.**

**தமிழரின் தேசிய ஆன்மாவில் மிக மோசமான ரணகளத்தை ஏற்படுத்திய பௌத்த, சிங்கள பேரினவாத வெறி பிடித்த தலைவர் என்ற ரீதியிலும் வரலாற்றில் அவர் இடம்பிடிப்பது நிச்சயம். ஆனால் அந்த இடங்கள் எவையும் மகத்துவத்துக்கு உரியனவாக இருக்க மாட்டா. மகா அயோக்கியத்தனங்களுக்கு உரியனவாகவே இருக்கும்.**

# மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துங்கள்!

## அமெரிக்கா கோரிக்கை

ஜனநாயகத்தை உறுதி செய்ய மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலர் விக்டோரியா நுலண்ட் இதனைத் தெரிவித்தார்.

மேலும் நாளை (வெள்ளிக்கிழமை) தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்திக்க எடுத்துள்ள நடவடிக்கையை வரவேற்கிறேன் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உடனான சந்திப்பைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மிகவும் கடினமான மற்றும் முக்கிய தருணத்தில் தாம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளேன் எனவும் இந்தத் தருணத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறேன் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி பெற இலங்கை அரசாங்கம் எடுத்த முடிவு துணிச்சலான நடவடிக்கை என விக்டோரியா நுலண்ட் குறிப்பிட்டார்.

# கண்ணகி மாட்டுவண்டில் சவாரி திடல் திறப்பும் மாட்டு வண்டில் சவாரிகளும்!







முல்லைத்தீவு வற்றாப்பளை நந்திக்கடல் கரையில் அமையப்பெற்ற கண்ணகி மாட்டுவண்டில் சவாரித்திடல் திறப்பு நிகழ்வு செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

சவாரி திடல் திறப்பு நிகழ்வைத் தொடர்ந்து வடமாகாணத்தைச் சேர்ந்த மாட்டுவண்டி சவாரியாளர்கள் கலந்து கொண்டு மாட்டுவண்டி சவாரிப் போட்டி நடைபெற்றது. வடமாகாணத்தைச் சேர்ந்த 72 சோடி மாடுகள் இதில் கலந்து கொண்டன.

அ,ஆ,இ,ஈ,உ என பிரிவுகள் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன.

இதன்போது அ– பிரிவில் முதற்பரிசான தங்கப்பதக்கத்தை யாழ்ப்பாணம் சங்குவேலியைச் சேர்ந்த கே.சந்திரன் பெற்றுக்கொண்டார். ஆ–பிரிவில் தங்கப்பதக்கத்தினை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையினை சேர்ந்த விக்னேஸ்வரன் பெற்றுக்கொண்டார்

இ–பிரிவில் தங்கப்பதக்கத்தை மல்லாவி முல்லைத்தீவைச் சேர்ந்த த.மனோசாந்த் பெற்றுக்கொண்டார். ஈ–பிரிவில் தங்கப்பதக்கத்தை யாழ்ப்பாணம் பொன்னாலையைச் சேர்ந்த க.றிஜிதா பெற்றுக்கொண்டார்.

உ–பிரிவில் தங்கப்பதக்கத்தினை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையினை சேர்ந்த முகேஸ் பெற்றுக்கொண்டுள்ளார்.

5 பிரிவுகளாக நடைபெற்ற இந்த போட்டில் முதல் வெற்றிபெற்ற மாட்டுவண்டில்களுக்கு தங்கப்பதக்கமும் இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்ற வண்டில்களுக்கு பரிசுப் பொருள்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் கையில் மாடு கொண்டு ஓடுதல் போட்டி மற்றும் வேகம் குறைவாக மோட்டார் சைக்கிள் ஓட்டுதல் போன்ற போட்டிகளும் நடைபெற்று வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டன.

# நகரங்கள் அனைத்தும் உருக்குலைந்துவிட்டன உக்ரைன் போர் இன்று 1 மாதத்தை எட்டியது

## 900 அப்பாவிகள் சாவு



போர்க்களத்தில் ராணுவ சீருடையுடன் இருந்த உக்ரைன் வீரரை பிரிய மனமின்றி அவரது பிஞ்சு குழந்தை கட்டிப் பிடித்து மன்றாடிய காட்சிகள் கல்நெஞ்சையும் கரைய வைப்பதாகவே இருந்தன.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இன்றோடு ஒரு மாதமாகிறது. இருப்பினும் ரஷ்யாவின் இலக்கு இன்னும் எட்டப்படவில்லை என்று ரஷ்ய அதிபர் மாளிகை தெரிவித்து இருக்கிறது.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி ரஷ்யா அந்நாட்டின் மீது போர் தொடுத்தது. வான் வழியாகவும், கடல் மார்க்கமாகவும் உக்ரைன் மீது ரஷ்யா நடத்த தொடங்கிய தாக்குதல்கள் அடுத்தடுத்த நாள்களில் உக்கிரமாகின.

இந்த தாக்குதல் காரணமாக உக்ரைன் மக்களும், அங்கு தங்கியிருந்த மற்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் உயிரை கையில் பிடித்துக் கொண்டு வெளியேறினார்கள். இப்படி போர்க்களத்துக்கு நடுவே உக்ரைன் நாட்டினரும் வெளிநாடுகளை சேர்ந்தவர்களும் ஆபத்தான முறையில் வெளியேறிய வீடியோக்களும், படக் காட்சிகளும் நெஞ்சை உருக்கும் வகையிலேயே அமைந்திருந்தன.

போர்க்களத்தில் ராணுவ சீருடையுடன் இருந்த உக்ரைன் வீரரை பிரிய மனமின்றி அவரது பிஞ்சு குழந்தை கட்டிப் பிடித்து மன்றாடிய காட்சிகள் கல்நெஞ்சையும் கரைய வைப்பதாகவே இருந்தன.

இப்படி உக்ரைன் போர்க்கள காட்சிகள் விவரிக்கப்படுகின்றன. உக்ரைனில் நடைபெற்று வரும் ரஷ்ய படைகளின் தாக்குதல் காரணமாக அந்நாட்டில் இருந்து ஒரு கோடிக்கும் அதிகமானோர் அகதிகளாக வெளியேறி இருக்கிறார்கள்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பக்கத்து நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ராணுவ பலத்துடன் ஒப்பிடுகையில் உக்ரைனை விட ரஷ்யா பல மடங்கு வலிமை வாய்ந்ததாகும். இதனால் உக்ரைன் மீது அந்நாடு போர் தொடுத்த போது சில நாள்களிலேயே உக்ரைன் முழுவதையுமே ரஷ்யா கைப்பற்றிவிடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அதனை பொய்யாக்கும் வகையில் உக்ரைன் ராணுவ வீரர்களின் செயல்பாடுகள் அமைந்திருந்தன. ரஷ்ய படையினரை உக்ரைன் ராணுவத்தினர் இவ்வளவு தூரம் வலிமையாக எதிர் கொள்வார்கள் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

அந்த அளவுக்கு உக்ரைன் ராணுவத்தினர் ரஷ்ய படையினரை சாதுர்யமாக எதிர்கொண்டு வருகிறார்கள். இதனால் ரஷ்ய படையினரால் தங்களது இலக்குகளை எளிதாக எட்ட முடியாத நிலையே உள்ளது.

உக்ரைன் தலைநகரமான கீவ் நகரை ரஷ்ய ராணுவம் சுற்றி வளைத்து தொடர்ச்சியாக தாக்குதல் நடத்திய போதிலும் அந்த நகரை இன்னும் முழுமையாக கைப்பற்ற முடியவில்லை. இதுவும் ரஷ்யாவுக்கு பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது.

கீவ் நகரை கைப்பற்றும் முயற்சியில் ரஷ்ய ராணுவம் நேற்று வான்வழி தாக்குதல்களை தீவிரப்படுத்தியது. இதனால் அப்பகுதி முழுவதுமே புகை மண்டலமாக காட்சி அளித்தது. இந்த தாக்குதலில் வணிக வளாகம் ஒன்று சேதம் அடைந்து 4 பேர் காயம் அடைந்தனர்.

ரஷ்ய படைகளின் தாக்குதலை கடந்த ஒரு மாத காலமாக உக்ரைன் சமாளித்து வந்த போதிலும் ரஷ்ய படைகளின் கண்மூடித்தனமான தாக்குதலில் உக்ரைனில் பல நகரங்கள் உருக்குலைந்து போயுள்ளன. ரஷ்ய படையினரின் குண்டு வீச்சு தாக்குதலால் உக்ரைனின் அழகிய நகரங்கள் பல சின்னாபின்னமாக சிதறிக் கிடக்கின்றன.

தெற்கு பகுதியில் உள்ள மரியுபோல் துறைமுகமும் கடுமையான பாதிப்புகளை சந்தித்துள்ளது. நகரம் முழுவதுமே சுக்கு நூறாக நொறுங்கி கிடக்கிறது. இதனால் அங்கு சுமார் 1 லட்சம் பேர் உணவின்றி பட்டினியால் தவித்து வருகின்றனர் என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வேதனை தெரிவித்துள்ளார்.

அங்குள்ள மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களை கொண்டு செல்லும் தன்னார்வலர்கள் தடுத்து நிறுத்தப்படுகின்றனர் எனவும் உக்ரைன் அரசு குற்றம் சாட்டியுள்ளது. அதே நேரத்தில் அங்கு தவித்து வரும் பொதுமக்களை மீட்பதற்கு கூட ரஷ்ய ராணுவம் கருணை காட்டவில்லை என்றும் உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது.

பொதுமக்களை மீட்டு வெளியில் கொண்டு வருவதற்கான வழித்தடத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கும் ரஷ்யா முட்டுக்கட்டை போட்டுள்ளதாக உக்ரைன் அதிகாரிகள் குற்றம் சாட்டி உள்ளனர்.

பொதுமக்களுக்கு உதவி செய்ய சென்ற மனிதாபிமான தூதர் ஒருவரையும் ரஷ்யா சிறைபிடித்து வைத்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதுதொடர்பாக அந்த நாட்டின் துணை பிரதமரான இர்னி வெரஸ்கல் கூறும்போது, ''11 பஸ் டிரைவர்களையும், 4 பணியாளர்களையும் ரஷ்ய ராணுவம் அவர்களது வாகனங்களோடு சிறை பிடித்து வைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மரியுபோல் நகரில் இருந்து தப்பிச் சென்று போலந்தில் தஞ்சம் அடைந்துள்ள பெண் ஒருவர் ரஷ்ய ராணுவம் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை கூறி இருக்கிறார். கடந்த 20 நாள்களாக ரஷ்ய ராணுவம் பொதுமக்கள் வசிக்கும் பகுதியில் இடைவிடாமல் குண்டுகளை வீசியது என்றும், கடைசி 5 நாள்களாக 5 நிமிடத்துக்கு ஒருமுறை ரஷ்ய விமானங்கள் வான்வழி தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருந்தன என்றும் மிரட்சியுடன் தெரிவித்துள்ளார்.

மரியுபோல் நகரில் வான்வழி தாக்குதல் நடத்துவதற்காக 'அசோவ்' கடல் பகுதியில் ரஷ்ய கப்பல்கள் ரோந்து சுற்றி வருகின்றன என அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார். இதனால் உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல் அடுத்து வரும் நாள்களில் மேலும் அதிகரிக்கலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே உக்ரைனின் செர்னிகிவ் நகரையும், கீவ் நகரையும் இணைக்கும் முக்கிய பாலம் ஒன்றை ரஷ்ய ராணுவம் நேற்று தகர்த்துள்ளது. இதன் மூலம் அந்த பகுதியில் தவித்து வரும் பொதுமக்களை மீட்க முடியாத இக்கட்டான சூழலுக்கு உக்ரைன் தள்ளப்பட்டுள்ளது.

இதற்கிடையே போர்க்களத்தில் உள்ள ரஷ்ய ராணுவத்திற்கும் உணவு பற்றாக்குறை ஏற்படும் நிலையும் உருவாகி உள்ளது. போர் தொடங்கி ஒரு மாதமாகி இருக்கும் நிலையிலும் உக்ரைன் நாட்டு ராணுவத்தினருடன் ரஷ்ய ராணுவ வீரர்கள் பல பகுதிகளில் போராடும் நிலையே நீடிக்கிறது.

ரஷ்ய ராணுவம் மேற்கொண்ட தவறான திட்டமிடலே இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. இதனால் ரஷ்யா தரப்பிலும் பல இழப்புகள் ஏற்பட்டுள்ளன. சுமார் 15 ஆயிரம் ரஷ்ய வீரர்கள் போரில் கொல்லப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகி இருக்கிறது.

அதே நேரத்தில் 900 அப்பாவி மக்களும் போரில் உயிரிழந்துள்ளனர். அடுத்து வரும் நாள்களிலும் போர் நீடிக்கும் பட்சத்தில் இந்த உயிரிழப்புகளும், பாதிப்புகளும் மேலும் அதிகரிக்கவே வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

# உக்ரைனில் புடின் சாதித்தது என்ன?

## ரஷ்யா பதில்



உக்ரைனில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் சாதித்தது என்ன? என்ற கேள்விக்கு அதிபர் மாளிகையின் செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ் கோவ் பதில் அளித்தார்.

ரஷ்ய அதிபர் மாளிகையின் செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், சி.என்.என். டெலி விஷனுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர், உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு நின்று விட்டதாக தகவல் வெளியானதை மறுத்தார்.

அவரிடம். உக்ரைனில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் சாதித்தது என்ன? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், புடின் இன்னும் சாதிக்கவில்லை. ஏற்கனவே நிறுவப்பட்ட திட்டங்கள், நோக்கங்களின்படி தாக்குதல் நடக்கிறது. புடினின் முக்கிய குறிக்கோள்கள், உக்ரைனின் ராணுவ திறனை அகற்றுவது, உக்ரைனை ரஷ்ய எதிர்ப்பு மையத்தில் இருந்து நடுநிலை நாட்டுக்கு மாறுவதை உறுதி செய்வதாகும் என பதில் அளித்தார்.

## உக்ரைனில் இருந்து வெளியேற மறுக்கும் இந்திய கன்னியாஸ்திரிகள்

எல்லாவற்றிலும் மேலானது, மனிதநேயம்தான் என்பதை ஓசையின்றி நிரூபித்து வருகிறார்கள். இந்திய கன்னியாஸ்திரிகள் இருவர். அதுவும் உயிருக்கு உத்தரவாதம் இல்லாமல் குண்டு மழை பொழியும், உக்ரைன் தலைநகர் கீவ்வில். அன்னை தெரசாவின் 'மினரீஸ் ஆப் சேரிட்டிஸ்' அமைப்பைச் சேர்ந்த, கன்னியாஸ்திரிகளான ரோசலா நுதாங்கி (வயது 65), ஆன்பிரிடா (48). இவர்கள் இருவருமே மிசோரம் மாநிலத்தின் தலைநகரான அய்சால் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இப்போது உக்ரைனில் இடைவிடாது போர் நடந்து வந்தாலும் தலைநகர் கீவ்வில் வீடற்ற 37 உக்ரைனியர்களையும், ஒரு கேரள மாணவியையும் கரிசனையுடன் கவனித்துக்கொண்டு மகோன்னதமான மக்கள் சேவை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருபக்கம் போர், மற்றொரு பக்கம் உணவு பற்றாக்குறை ஆகியவற்றுக்கு மத்தியிலும் சேவையாற்றிக்கொண்டிருக்கிற இந்த 2 கன்னியாஸ்திரிகளும் அங்கிருந்து ஒரு பாதுகாப்பான இடத்துக்கு இடம் பெயரச்சொல்லி அறிவுறுத்தப் பட்டபோதும் அதை ஏற்க மறுத்துவிட்டார்கள்.

நாங்கள் உக்ரைனை விட்டு வெளியேற மாட்டோம், எல்லா காலங்களிலும் தேவைப்படுவோருக்கும், வீடற்றவர்களுக்கும் சேவை செய்வது என்பது எங்களது முதன்மையான கடமைகளில் ஒன்றாகும் என்று கன்னியாஸ்திரி ஆன் பிரிடா கூறினார் என மிசோரமில் உள்ள அவரது சகோதரர் ராபர்ட் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறும்போது, நாங்கள் அவர்களை பற்றி கவலைப்படக்கூடாது என்று எனது அக்கா பிரிடா கூறினார். போரினால் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தாலும் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என அக்கா கூறுகிறார் என்றார்.

கன்னியாஸ்திரி ரோசலா, 8 சகோதரிகளில் ஆறாவதாக பிறந்து 1991இல் ரஷ்யாவுக்கு மிஷனரியாக அனுப்பப்பட்டவர். 10 ஆண்டுகள் மாஸ்கோவில் பணியாற்றி உள்ளார்.

ரோசலா பற்றி அவரது சகோதரர் மகள் சில்வீன் கூறும்போது, எனது அத்தையும், பிரிடா சகோதரியும் பாதுகாப்பாக இருக்கிறார்களாம். ஆனால் உணவுபற்றாக்குறையின் விளிம்பில் உள்ளனர். அத்தையுடன் நான் திங்கட்கிழமையன்று தொலைபேசியில் பேசினேன் என குறிப்பிட்டார்.

அத்தியாவசிய பொருள்களை ரகசியமாக பெற முடிந்தாலும், போர் மற்றும் குண்டு வெடிப்புகளால் பற்றாக்குறை பற்றி அச்சம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார் எனவும் சில்வீன் தெரிவித்தார். இந்த இரு கன்னியாஸ்திரிகளுடன் வேறு நாடுகளைச் சேர்ந்த 3 கன்னியாஸ்திரிகளும் இணைந்து குண்டுவெடிப்புகளுக்கும், துப்பாக்கிச் சூடுகளுக்கும், ஏவுகணை வீச்சுகளுக்கும் மத்தியிலும் மனிதநேய சேவை ஆற்றி வருகின்றமை மக்களை நெகிழ வைத்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கையிலிருந்து வரும் ஈழத்தமிழ் சொந்தங்களை சிறையில் அடைப்பது கொடுமை என சீமான் கண்டனம்



இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக தாய்த்தமிழகத்தில் தஞ்சம்கேட்டு கடல்வழியாக படகுகளின் மூலம் அடைக்கலம் தேடிவரும் ஈழச் சொந்தங்களை வழக்குகள் போட்டு கைதுசெய்வது கொடுமை, என சீமான் கூறியுள்ளார்.

நாம்தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இந்த விடயம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் விளைவினால் அத்தியாவசியப் பொருள்களின் விலை பன்மடங்கு உயர்ந்து, அந்நாட்டுக் குடிமக்கள் அன்றாடச் செலவினங்களைக்கூட எதிர்கொள்ள முடியாது, வறுமைக்கும், ஏழ்மைக்கும் உள்ளாகி, தவித்து வருகிறசெய்திகள்கவலைஅளிக்கின்றன.

சிங்கள இனவெறிபிடித்து, தமிழர்களை அழித்தொழிக்க உலகெங்கும் கடன்களை வாங்கிக்குவித்து நாட்டு மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிலும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியிலும் கவனம் செலுத்தாத கொடுங்கோல் சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறி செயல்பாடுகளே இத்தகைய நிலைக்குக் காரணம் என்றாலும், இன்றைக்கு தமிழர்களும் சேர்ந்து பாதிப்புக்குள்ளாகி நிற்பது பெரும் மன வேதனையைத் தருகிறது.

இவ்வளவு ஆண்டுகளாக சிங்கள ஆட்சியாளர்களின் இன ஒதுக்கல் நடவடிக்கைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு, கொடும் துயரத்திற்கு ஆளாகி நின்ற தமிழ் சொந்தங்கள், இப்போது பொருளாதார நெருக்கடியினாலும் வறுமையின் கோரப்பிடியினாலும் வாடி வதங்கி, வாழ்க்கையை நடத்த முடியாத துயர்மிகு சூழலில் நாளும் அல்லல்பட்டு வருகின்றமை பெரும் மனவலியைத் தருகிறது.

இத்தகைய கையறு நிலையில், தாய்த்தமிழகத்தில் தஞ்சம்கேட்டு கடல் வழியாக படகுகளின்மூலம் அடைக்கலம் தேடிவரும் ஈழச்சொந்தங்களை வழக்குகள் போட்டு கைதுசெய்வது மேலும் துன்பத்திற்குள்ளாக்குவது - கொடுமை. அதிலும் பெற்றோர்களையும் குழந்தைகளையும் பிரித்து சிறையிலும் முகாம்களிலும் அடைப்பது கடும் கண்டனத்திற்குரியது. அனைத்தையும் இழந்து வரும் நம்மக்களைஆரத்தழுவிஅரவணைத்து, திபெத்திய ஏதிலிகளுக்கு இந்நாடு வழங்கியிருக்கிற சலுகைகளையும் வசதிகளையும் போல நம் சொந்தங்களுக்கும் செய்து கொடுத்து அவர்களைக் காக்க முன்வர வேண்டும், என்று தெரிவித்திருக்கிறார்.



சாக்கடையை சுத்தம் செய்த ஆம் ஆத்மி கவுன்சிலர் முதல்வன் பாணியில் பாலாபிஷேகம் செய்த மக்கள்

டெல்லியில் ஆட்சியில் இருக்கும் ஆம் ஆத்மி கட்சி அடுத்து பஞ்சாப் சட்டசபை தேர்தலிலும் அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது.

டெல்லியில் அடுத்து உள்ளாட்சிதேர்தல்நடக்கவுள்ளது. இதற்கான முன்னேற்பாடு பணிகளை ஆம் ஆத்மி கட்சியின் நிர்வாகிகள் மேற்கொண்டு வருகிறார்கள். இதற்காக டெல்லியின் முக்கிய தெருக்களுக்குசென்று அங்கு குடியிருக்கும் மக்களின் குறைகளை கேட்டு வருகிறார்கள்.

அதன்படி டெல்லியில் மக்கள் அதிகம் வாழும் பகுதிக்கு சென்ற ஆம் ஆத்மி பிரதிநிதி அங்குள்ள மக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். அப்போது அந்த பகுதியில் உள்ள சாக்கடை பல நாள்களாக அடைத்து இருப்பதாகவும் அதனைசீர்செய்யவேண்டும் எனவும் மக்கள் கூறினர்.

இதைக் கேட்டதும், குறித்த ஆம் ஆத்மி கட்சியின் கவுன்சிலர் சாக்கடைக்குள் குதித்து அதன் அடைப்பை அகற்றும் பணியில் ஈடுபட்டார். அடைப்பை அகற்றிய பின்னர் அவர் சாக்கடை கழிவுகளுடன் வெளியே வந்தார். இதனைக் கண்ட அப்பகுதி மக்கள், சாக்கடை அடைப்பை அகற்றிய ஆம் ஆத்மி கவுன்சிலருக்கு பாலால் அபிஷேகம் செய்தனர். இதனை சிலர் கைப்பேசியில் படம் எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளனர்.

# தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களை கண்டறிய தமிழகத்தில் வீடு வீடாக ஆய்வு




கொரோனாத் தொற்றை தடுப்பதற்காக கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி முதல் இந்தியா முழுவதும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

முதலில் மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் முன்கள பணியாளர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. அதன் பிறகு அவர்களுடன் சேர்ந்து 60 வயதுக்குமேற்பட்டவர்களுக்கும், இணை நோய் உள்ளவர்களுக்கும் தடுப்பூசி போடப்பட்டது.

பின்னர் 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. இதையடுத்து 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடும் பணி தொடங்கியது. அவர்களுக்குகொவிஷீல்ட், கொவேக்சின் ஆகிய தடுப்பூசிகள் போடப்பட்டன.

இந்த நிலையில் தடுப்பூசி போடுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அனைவருக்கும் விரைந்து தடுப்பூசி போடவும் தமிழகம் முழுவதும் மெகா தடுப்பூசி முகாம் தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சனிக்கிழமை தோறும் இந்த முகாம் நடத்தப்படுகிறது.

தமிழகத்தில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 5 கோடியே 78 லட்சத்து 91 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 5 கோடியே 32 லட்சத்து 99 ஆயிரத்து 355 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் 50 லட்சத்து 99 ஆயிரத்து 904 பேர் இன்னும் முதல் தவணை தடுப்பூசியை கூட போடாமல் உள்ளனர். தற்போது கொரோனாத் தொற்று குறைந்து வரும் நிலையில் அவர்கள் அலட்சியம் காரணமாக இன்னும் தடுப்பூசி போடவில்லை. மேலும் மீதமுள்ளவர்களிடம் தடுப்பூசி போடும் ஆர்வம் குறைந்துள்ளதால் அனைவருக்கும் தடுப்பூசி போடும் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

எனவே தமிழகத்தில் கொரோனாத் தடுப்பூசி போடாத 50 லட்சத்து 99 ஆயிரத்து 904 பேரையும் அடையாளம் கண்டு அவர்களுக்கு தடுப்பூசி போடும் முயற்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து மக்கள் நல்வாழ்வுத்துறை அதிகாரிகள் தகவல் வழங்குகையில், தமிழகத்தில் 12 வயது முதல் 14 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு தற்போது தான் தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கும் விரைந்து தடுப்பூசி போடப்படும்.

அதே நேரத்தில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் தடுப்பூசி போடாதவர்களை அடையாளம் கண்டு முதல் மற்றும் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது. அவர்களுக்கு விரைவில் தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது. இதற்காக வீடு வீடாக சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்காக தடுப்பூசி போடாதவர்களை அடையாளம் காணும் பணியில்சுகாதாரபணியாளர்கள் ஈடுபடவுள்ளனர். அடுத்து வரும் கொரோனா அலையை தடுக்க வேண்டும் என்றால் 100 சதவீதம் பேரும் 2 தவணை கொரோனா தடுப்பூசிகளையும் செலுத்தி இருக்க வேண்டும். 100 சதவீதம் தடுப்பூசி போடப்பட்டால் கொரோனா அலையை கண்டு நாம் பயப்பட வேண்டியதில்லை, என்று குறிப்பிட்டுள்ளனர்.



# டுபாய் கண்காட்சியில் தமிழ்நாட்டு அரங்கம் ஸ்டாலின் நாளை திறந்துவைக்கவுள்ளார்

டுபாயில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் வேர்ல்ட் எக்ஸ்போ சர்வதேச தொழில் கண்காட்சி நடைபெற்று வருகிறது. 5 வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் இந்தக் கண்காட்சி வருகிற 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த கண்காட்சியில் இந்தியா உள்பட 192 நாடுகள் பங்கேற்றுள்ளன. இவற்றின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கண்காட்சியில் இந்திய அரங்கில் மார்ச் 25 முதல் மாநில அரசுகளும் அரங்குகள் அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி டுபாய் சர்வதேச தொழில் கண்காட்சியில் தமிழ்நாடு அரங்கு உருவாக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் தொழில் முதலீடுகளை பெற முடியும் என்ற நோக்கில், தமிழ்நாட்டு அரங்கில் 31 ஆம் திகதி வரை தமிழ்நாட்டு வாரமாக அனுசரிப்பதற்கு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக மக்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவும் இந்த அரங்கை தொடங்கி வைப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று மாலை சென்னையில் இருந்து விமானம் மூலம் டுபாய்க்குப் புறப்பட்டு சென்றிருக்கிறார். நாளை காலை 10 மணிக்கு சர்வதேச பொருளாதார அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் அவர் ஆலோசனை நடத்தவிருக்கிறார். பிற்பகலில் டுபாய் சர்வதேச தொழில் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு அரங்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கவுள்ளார்.

டுபாய் உலகக் கண்காட்சியில் இந்தியா உள்பட 192 நாடுகள் பங்கேற்றுள்ளன. இதில் பங்கேற்றிடும் ஒவ்வொரு நாட்டிற்கும், பிரத்யேகமாக அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாபெரும் கண்காட்சியை சுமார் 3 கோடி பேர் பார்வையிடுவார்கள் என தெரிகிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு முதன் முதலாக செல்லும் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் அவருக்கு சார்ஜாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் இருந்து அம்பாறை பகுதிக்கு இளைஞர் சேவை அலுவலகம் இடமாற்றமா?

## பிரதேச இளைஞர்கள் சீற்றம்; எதிர்ப்பு



இளைஞர் அபிவிருத்தி பணிகளில் இன மற்றும் பிரதேச வாதங்கள் எதுவுமின்றி தேசிய நலன்களைக் கவனத்திற்கொண்டு செயற்பட்டுவரும் சாய்ந்தமருது பகுதியிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகத்தை அம்பாறை நகரத்திற்கு கொண்டு செல்ல எடுக்கப்படும் நடவடிக்கைகளை உரிய தரப்பினர் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது தனியார் மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் சாய்ந்தமருது இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் றிஹான் சாலீன், இளைஞர் கழகங்களின் சம்மேளன அம்பாறை கிளையின் பிரதித்தலைவர் எம்.எம்.ருக்ஸான், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட பிரதிநிதி சிப்னால் அஷீஸ், கிழக்கின் கேடயம் அமைப்பின் செயற்பாட்டாளர் சக்கீ சைன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ மாவட்ட கிளையின் பணிப்பாளர்சபை உறுப்பினர் ஹிஸாம் ஏ.பாவா ஆகியோர் இணைந்து மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் அங்கு தெரிவித்தவை வருமாறு:-


சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையம் எவ்வித தடைகளுமின்றி 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து முறையாக இயங்கிவரும் நிலையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகத்தின் நடவடிக்கைகளை சீர்குலைக்கும் வகையில் சிலர் ஈடுபட்டு வருகின்றமையையிட்டு மிகுந்த மன வேதனை அடைகின்றோம். சில உத்தியோகத்தர்களின் சுயநல தேவைகளுக்காக இளைஞர்களின் அபிலாஷைகளை விட்டுக்கொடுக்க முடியாது. தனிப்பட்ட போக்குவரத்து மற்றும் இதர காரணங்களைச் சுட்டிகாட்டி தற்போது நடவடிக்கைக அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படுகின்றமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சில சுயநலம் கொண்ட உத்தியோகத்தர்களுக்காக எவ்வித குறைபாடுகளும் இல்லாமல் இயங்குகின்ற இந்த அலுவலகம் ஏன் மாற்றப்பட வேண்டும்? நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லுணர்வு பற்றியும் இளைஞர்களின் அபிவிருத்தி பற்றியும் மக்களும் அரசாங்கமும் கருத்துக் கூறிவரும் இச்சூழ்நிலையில் அதனைச் சிதைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே நீண்டகாலமாக சாய்ந்தமருதில் இயங்கிவரும் கிழக்கு மாகாண அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்ந்தும் அதே இடத்தில் மேற்கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் ஜனாதிபதி, பிரதமர், இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் இவ்விடயத்தில் நீதியை பெற்றுத் தரவேண்டும். - என்றனர்.

## மட்டக்களப்பில் தமிழர் - முஸ்லிம்கள் உறவை சீர்குலைக்கிறார் காத்தான்குடி நகரத் தலைவர்

### மட்டு. மேயர் சரவணபவன் குற்றச்சாட்டு

மட்டக்களப்பில் மேம்பட்டு வரும் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியிலான உறவை சீர்குலைக்கும் வகையிலான நடவடிக்கைகளை காத்தான்குடி நகர சபையின் தவிசாளர் முன்னெடுத்து வருகின்றார் என மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் தி.சரவணபவன் தெரிவித்தார். மட்டக்களப்பு மாநகர சபையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே, அவர் இதனை தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில், காத்தான்குடி நகர சபையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து அப்பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டிருந்தோம்.

இதன்போது அது தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றன. நாங்கள் அப்பகுதி மக்களுக்கு தெளிவூட்டல்களை வழங்கினோம்.

அத்துடன், இது தொடர்பில் காத்தான்குடி நகர சபைத் தவிசாளருக்கும் கடிதம் அனுப்பியிருந்தோம். இவை, சட்டதிட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகள் என அதில் நாங்கள் தெரிவித்திருந்தோம். ஆனால் அதற்கு எந்தவிதமான பதில்களும் வழங்கப்படவில்லை. அவர் தனது செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார். இது தொடர்பில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண ஆளுநர், உரிய அமைச்சுகளுக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளோம்.

இதற்கு மேலாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வரி அறவீடு செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுள்ளன என்ற அடிப்படையில், காத்தான்குடி தவிசாளருக்கு எதிராகவும் அறிவிப்பு செய்த பள்ளிவாசல்களுக்கு எதிராகவும் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரு இனங்களும் ஒன்றாக இணைந்து எமது உரிமைகளை, தேவைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில், இன முரண்பாடுகளை ஏற்படுத்தி, மீண்டும் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சியாக இதனைக் கருதவேண்டியுள்ளது - என்றார்.

## புதிய உறுப்பினராக சத்தியப்பிரமாணம்

(காரைதீவு நிருபர் சகா)

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் சுயேச்சைக் குழுவின் புதிய உறுப்பினராக தங்கராசா ரவீந்திரன் நேற்று புதன் கிழமை சத்தியப் பிரமாணம் செய்தார். மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் டா. யோகநாதன் தலைமையில் சபையின் 49 ஆவது மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்றது. சுயேச்சைக் குழுவில் எலவே உறுப்பினராக இருந்த தியாகராசா தேவரஞ்சன் என்ற உறுப்பினர் காலமாகியமையையடுத்து, அவ்விடத்திற்கு புதிய உறுப்பினராக தங்கராசா ரவீந்திரன் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்டிருந்தார். நேற்றைய தினம் அவர் புதிய உறுப்பினராக பதவி ஏற்றார்.

## இளைஞர் சேவை மன்ற அலுவலகம் இடமாற்றத்துக்கு ரிஷாத் ஆட்சேபம்

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் அமைச்சின் கீழ் உள்ள, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகம் சாய்ந்தமருதில் இருந்து அம்பாறைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.




சாய்ந்தமருதில் இயங்கிவந்த கிழக்கு மாகாண அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ந்தும் அதே இடத்தில் மேற்கொள்ளும் வகையில், அதற்கான உத்தரவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பிறப்பிக்க வேண்டும் எனக் கோரி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு நேற்றைய தினம் கடிதம் ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகம், சாய்ந்தமருதிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கிவருகிறது. இதனை அம்பாறை நகரத்திற்கு இடமாற்றம் செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், அதனைத் தடுத்து நிறுத்தி, அந்த அலுவலகம் அவ்விடத்திலேயே தொடர்ந்தும் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ரிஷாத் எம்.பி. அக்கடிதத்தில் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

## பாலமுனை, முள்ளிக்குளம் அத்துமீறல் சம்பவம்; தொல்பொருள் ஆணையருடன் ஹக்கீம் பேச்சு

அம்பாறை மாவட்டத்தின் பாலமுனை, முள்ளிக்குளம் மலைப் பிரதேசத்தில் அண்மையில் நடந்தது போன்று, அங்கு வசிக்கும் பொதுமக்களுடன் கலந்தாலோசிக்காமல் தொல்பொருள்களும், புராதனச் சின்னங்களும் இருப்பதாகக் காரணம் காட்டி



வெளியார் நிர்மாண வேலைகளை மேற்கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது என்றும், அங்கு வழமையான பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விவசாயிகளுக்குத் தடை விதிக்கப்பட மாட்டாது என்றும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மணதுங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமிடம் தெரிவித்துள்ளார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நேற்று புதன்கிழமை கொழும்பில் தொல்பொருள் திணைக்களத்தில், அதன் பணிப்பாளர் நாயகத்துடன் நடத்திய பேச்சின் போதே இவ்வாறு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் அந்தப் பிரதேசத்திற்கு திடீரென சிலர் வந்து நிர்மாண வேலைகளில் ஈடுபட்டமையைத் தொடர்ந்து பெரும் பதற்ற நிலை தோன்றியிருந்ததைச் சுட்டிக்காட்டி, அவ்வாறான பிரதேசங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கையையும், கலாசாரத்தையும் பாதிக்கும் விதத்தில் அத்து மீறல் நடப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் பணிப்பாளர் நாயகத்திடம் வலியுறுத்தியுள்ளார்

அதற்கு பதிலளித்த தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு பேசினார். இவ்விடயம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும்கூட, அங்கு வாழும் மக்களுடன் உரிய முறையில் கலந்தாலோசனை செய்யப்படாமல் அத்தகைய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட மாட்டா என்றும் மாவட்ட அரச அதிபருக்கும் அது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் பதிலளித்துள்ளார் என்றும் தெரிய வந்தது.

நாட்டில் - குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் - தொல்பொருள் அகழ்வாராய்ச்சி, கண்டுபிடிப்புகள் என்ற பின்னணியில் சிறுபான்மை சமூகத்தினர் செறிந்து வாழும் பிரதேசங்களில் இவ்வாறான அத்துமீறல்கள் இடம் பெறுகின்றமை தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திடம் இச்சந்திப்பின் போது விசனம் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





## ஐ.பி.எல். போட்டிகளைக் காண 25 சதவீத ரசிகர்களுக்கு அனுமதி

ஐ.பி.எல். போட்டி அமைப்பு குழு சார்பில் நேற்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், 'கொரோனாத் தொற்று காரணமாக ஒரு குறுகிய இடைவெளிக்கு பிறகு மைதானத்துக்கு வரவிருக்கும் ரசிகர்களை ஐ.பி.எல். தொடர் வரவேற்கிறது.

இந்தத் தொடர் மிகவும் முக்கியமான தருணமாக இருக்கும். மும்பை, நவிமும்பை, புனே ஆகிய இடங்களில் நடைபெறும் இந்தத் தொடருக்கான போட்டிகளில் கொரோனா தடுப்பு பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி 25 சதவீத ரசிகர்கள் அனுமதிக்கப்படுவார்கள், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டித் தொடருக்கான நுழைவுச்சீட்டு விற்பனை நேற்று தொடங்கியிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## ஐ.பி.எல். ஆரம்ப ஆட்டத்தில் மொயின் அலி விளையாடார்

வருகிற 26 ஆம் திகதி தொடங்கவுள்ள ஐ.பி.எல். 2022 கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதவிருக்கின்றன.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இடம்பெற்றுள்ள இங்கிலாந்து நாட்டு சகலதுறை வீரர் மொயின் அலி ஆரம்பப் போட்டியில் விளையாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மொயின் அலி இங்கிலாந்திலிருந்து இந்தியா வருவதற்கான விசா இன்னமும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தொடக்க ஆட்டத்தில் மொயின் அலி விளையாட மாட்டார் என்றே தெரிகிறது.

மொயின் அலி விளையாட முடியாத நிலையில் அவருக்குப் பதிலாக நியூசிலாந்து வீரர் டெவொன் கொன்வே அணியில் இடம் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐ.சி.சி. சகலதுறை வீரர் தரவரிசை மீண்டும் முதலிடத்தில் ஜடேஜா!



சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.), டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட்டுள்ளது. இதில் சகலதுறை வீரர்கள் தரவரிசையில் இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜா மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார். 385 புள்ளிகளுடன் ஜடேஜா முதலிடத்திலும், மேற்கிந்திய வீரர் ஜேசன் ஹோல்டர் 357 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் ரவிச்சந்திரன் அஸ்வின் மூன்றாவது நிலையிலும் உள்ளனர்.

பந்து வீச்சாளர்கள் பட்டியலில் 886 பள்ளிகளைப் பெற்றுள்ள ஆஸ்திரேலியாவின் பட் கமின்ஸ் முதலிடத்தில் இருக்கிறார். இந்திய வீரர்கள் ரவிச்சந்திரன் அஸ்வின் இரண்டாவது இடத்திலும், தென்னாபிரிக்காவின் ரபாடா 3 ஆவது, ஜஸ்பிரித் பும்ரா 4 ஆவது இடத்திலும் உள்ளனர்.

துடுப்பாட்டவீரர்கள் வரிசையில் ஆஸ்திரேலியாவின் லபுசேன் 916 புள்ளிகளுடன் முதலிடத்திலும், இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் 2ஆவது, ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் 3 ஆவது இடத்திலுமிருக்கின்றனர்.

# தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் தொடரை கைப்பற்றி பங்களாதேஷ் அணி சாதனை





தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், பங்களாதேஷ் அணி 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றியைப்பெற்று மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. தென்னாபிரிக்க அணியை சொந்த மண்ணில் முதல் முறையாக தொடரொன்றில் வீழ்த்திய பங்களாதேஷ் அணி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

செஞ்சூரியனில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து, 37 ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. மலன் 39 ஓட்டங்களையும் மஹாராஜ் 28 ஓட்டங்களையும் எடுத்தனர். பங்களாதேஷ் அணியின் தஸ்கின் அஹமட் 5 விக்கெட்டுக்களையும் சகிப் அல் ஹசன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 155 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 26.3 ஓவர்கள் நிறைவில் ஒரேயொரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கையடைந்தது. தமீம் இக்பால் ஆட்டமிழக்காது 87 ஓட்டங்களையும் லிட்டொன் தாஸ் 48 ஓட்டங்களையும் சேர்த்தனர். தென்னாபிரிக்க அணியின் கேசவ் மஹாராஜ் வீழ்த்தப்பட்ட ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார். இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாக தமீம் இக்பாலும் தொடரின் நாயகனாக தஸ்கின் அஹமட்டும் தெரிவுசெய்யப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆசிரியர் சங்கத்தை புறக்கணித்து மேற்கொள்ளப்படும் வடக்கு ஆசிரியர்கள் இடமாற்றங்களை நாம் ஏற்கோம்!

## ஜோசப் ஸ்டாலின் காட்டம்

வடமாகாண கல்வி அமைச்சில் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற்று உள்ளதாக அறிகின்றோம். இந்தக் கூட்டம் தொடர்பாக, இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கு உரிய முறையில் தகவலெதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை ஆசிரிய சங்கத்தைத் திட்டமிட்டுப் புறக்கணித்து எடுக்கப்பட்டுள்ள பக்கச் சார்புடைய எந்தவொரு தீர்மானங்களுக்கும் இலங்கை ஆசிரியர் சங்கம் உடன்படப் போவதில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

வடமாகாண கல்விப் பணிப்பாளரின் பொறுப்பற்ற, திட்டமிடப்படாத, பக்கச் சார்பான இடமாற்ற நடைமுறைகளால், சிக்கலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் இடமாற்ற நடைமுறைகளுக்கு வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்களை மட்டும் பலிக்கடாவாக்கும் செயற்பாடுகளுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் அனுமதிக்கப் போவதில்லை. வடமாகாண கல்விப் பணிப்பாளராக ஏழு வருடங்கள் பூர்த்தி செய்துள்ள நிலையிலும், தொடர்ச்சியாக, இடமாற்ற சபை தீர்மானங்களை மீறி, இடமாற்ற சபையின் அனுமதியின்றி, பதிலீட்டு இடமாற்றம் வழங்கப்பட்ட பல ஆசிரியர்களுக்கு பல வருட காலங்களாக இட மாற்றங்களை ஒத்தி வைத்துள்ளார்.

அதேவேளை, ஒரே வருடங்களில் வழங்கப்பட்ட பதிலீட்டு இடமாற்றங்களின் போது, ஒரு பகுதியினருக்கு மீளவரும் திகதி குறிப்பிட்டும், இன்னொரு பகுதியினருக்கு திகதி குறிப்பிடாமல் பாரபட்சமான முறையில் இடமாற்றங்களை செயற்படுத்தி இருக்கின்றார். ஒரே வகுதி இடமாற்றங்களுக்கு வெவ்வேறு நிபந்தனைகள் மூலம் பாரபட்சங்கள் நடைபெற்று வருகின்றன.

அதேவேளை, கொவிட் – 19 தொற்று காலத்தின் நெருக்கடி நிலையில் நாடு இருந்தபொழுதில், அந்தக்காலகட்டத்தில், இடமாற்ற சபையின் அனுமதி பெறப்படாமல் ஒருசிலருக்கு வெளி மாவட்டங்களில் இருந்து சொந்த மாவட்டத்துக்கு முறையற்ற வகையில் இட மாற்றங்களை வழங்கியுள்ளார். மருத்துவக் காரணங்களுக்காகவும், குடும்ப நெருக்கடிகளுக்காகவும் தமது சொந்த வலயங்களுக்கு தற்காலிக இணைப்புக் கோரி நிற்கும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு கூட, பல இழுத்தடிப்புகளை செய்துவரும் வடமாகாண கல்விப் பணிப்பாளர், யாழ். மாவட்டத்தில் இருந்து, வெளிமாவட்ட சேவை எதனையும் செய்திராத பலரை தொடர்ச்சியாகப் பாதுகாத்து பக்கச்சார்பான இடமாற்ற நடைமுறைகளையே கடைப்பிடித்து வருகின்றார்.

இவ்வாறான , பக்கச்சார்பான செயற்பாடுகளால் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் முறையற்ற இடமாற்ற நடைமுறைகளால் வெளிமாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றமையை இலங்கை ஆசிரியர் சங்கம் அனுமதிக்கப்போவதில்லை.

எனவே, இட மாற்றங்கள் தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட பாரபட்சமான தீர்மானங்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கும்பாபிஷேகத்தில் நகைகள் அபகரிப்பு

## இருவர் வசமாக மாட்டினர்



தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஐந்தாவது தலைவாசல் கோபுரமான இராஜகோபுர கும்பாபிஷேக திருவிழாவில் அடியவர்களிடம் நகைகளைக் அபகரித்த இருவர் கைது செய்யப்பட்டனர். கிளிநொச்சி சாந்தபுரத்திலிருந்து வந்த நால்வர் இந்தக் அபகரிப்பில் ஈடுபட்ட நிலையில் இரு ஆண்கள் கைதுசெய்யப்பட்டமையுடன் பெண்கள் இருவர் தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வருகின்றனர்.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஐந்தாவது கோபுரமான தலைவாசல் இராஜகோபுர கும்பாபிஷேக திருவிழா நேற்று காலை இடம்பெற்றது.

திருவிழாவில் பங்கேற்ற அடியவர்கள் நால்வரிடம் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டன. அவர்களில் மூதாட்டி ஒருவரிடம் தங்கச் சங்கிலி அச்சுறுத்தி பறிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் நகைகளைப் பறிகொடுத்த நால்வரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். அதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் ஆண்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த 33 மற்றும் 37 வயதுடைய இருவரும் கார் ஒன்றில் வருகை தந்துள்ளனர். அவர்களது அபகரிப்புக்கு உதவி பெண்கள் இருவர் தலைமறைவாகியுள்ளனர். அவர்களைத் தேடும் பணி பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் பயணித்த கார் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்களிடமிருந்து கைச்சங்கிலி ஒன்றும் சங்கிலி ஒன்றும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.





# பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க ஸ்டிக்கர்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், மார்ச் 24

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான சுலோகங்கள் அடங்கிய ஸ்டிக்கர் வாகனங்களில் ஒட்டப்பட்டதுடன் துண்டுப்பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டன. நேற்று (புதன்கிழமை) காலை 9 மணியளவில் யாழ்ப் பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு ஆரம்பமானது.

‘அனைவருக்கும் இனிமையான பயணம்’ எனும் தொனிப்பொருளில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் தேசிய பெண்கள் குழு, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துடன் இணைந்து பொதுப் போக்குவரத்து பஸ்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்காக விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது முன்னாள் மகளிர் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளரும், தற்போதைய தேசிய பெண்கள் குழு உறுப்பினருமான இமெல்டா சுகுமார், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்.மத்திய பஸ் நிலைய முகாமையாளர், மாவட்ட செயலக அதிகாரிகள் உத்தியோகஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பெண்களுக்கெதிரான வன்முறைகளை பஸ்களில் இல்லாதொழிக்க ஆலோசனை





‘அனைவருக்கும் இனிமையான பயணம்’ எனும் தொனிப்பொருளில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் தேசிய பெண்கள் குழு, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துடன் இணைந்து பொதுப்போக்குவரத்து பஸ்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும், முன்னாள் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளரும், தற்போதைய தேசிய பெண்கள் குழு உறுப்பினருமான திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்துகொண்டமையோடு, மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், உதவி மாவட்ட செயலாளர் திருமதி எஸ்.சி.என்.கமலராஜன், சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. கோசலை மதன் (சட்டபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பஸ் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். மேலும், இந்தக் கலந்துரையாடலில் வளவாளராக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் கலந்துகொண்டு பொதுப் போக்குவரத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பாலியல் மற்றும் பாலியல் சாராத வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கினார்.

# புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் உலக நாடகவிழா

புத்தாக்க அரங்க இயக்கம் நடாத்தும் உலக நாடக தின விழா ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் புத்தாக்க அரங்க இயக்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கொரோனாவிற்கு பின்னரான சூழலில் நாடகச் செயற்பாடுகள் எனும் விடயத்திலான கலந்துரையாடல் நிகழ்வும் இளம் ஆற்றுகையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் எஸ்.ரி.குமரன் எஸ்.ரி.அருள்குமரன் எழுத்துருவாக்கம் நெறியாள்கையில் எம்மை நாமே காப்போம் ,வாக்கு எங்கள் உரிமை, உணர்விற்கு உயிர் கொடுப்போம் ஆற்றுகை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன .நாடக ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.03.2022இல் வெளியிடப்பெற்றது.